29th August 1970]

பாண்டியாறு—புன்னப்புழா புனல் மின் திட்டம்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) பாண்டியாறு-புன்னப்புழா புனல் மின் திட்டப் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளனவா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ஓ.பி. ராமன் : (அ)வும் (இ)யும் : பாண்டியாறு, புன்னப்புழா திட்டம் நிறுத்தப்படவில்லை. ஆனல், ஜமீன் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் அப்பகுதி முழுவதையும் கையகப்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்படுவதை முன்னிட்டு, இத்திட்டம் நிறைவேற்றப்படுவதன் வேகம் தற்காலிகமாய்க் குறைக்கப்பட்டது. பாண்டியாறு—புன்னப் புழா புனல் மின் சக்தித் திட்டத்தின் கடைகோடிப் பகுதி நீரைத் தமிழ் நாட்டில் பாசனத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளும் நோக்கத் துடன், இத்திட்டத்தை மறு ஆய்வு செய்யும் செயற்குறிப்பு ஒன்றும் உள்ளது. அத்தகைய ஆய்வு நடத்தப்படும் வரையில் மேலும் பணி தொடருவதை தள்ளி வைக்குமாறு அரசு கட்டளைகள்பிறப்பித்துள்ளது.

Reserved Forest in Srivilliputtur Taluk

(†)*20. *Q.*—THIRU D. SANTOSHAM : Will the Hon. the Minister for Electricity be pleased to state :

(*a*) whether representations have been received through the Collector of Ramanathapuram District for the free assignment of lands in the area classified as Reserved Forest in Srivilliputtur Taluk called 'புல் வெளி காடு' to deserving landless poor of that area ; and

(*b*) if so, the action taken thereon ?

ஸ்ரீவில்லிப்புத்தூர் வட்டத்தில் உள்ள ஒதுக்கக் காட்டுப் பகுதி

திரு. டி. சந்தோஷம் : மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) ஸ்ரீவில்லிப்புத்தூர் வட்டத்தில், ஒதுக்கக் காடாக வகை படுத்தப்பட்ட ''புல் வெளிக் காட்டு'' பகுதியில் உள்ள நிலங்களை, அப்பகுதியில் நிலமற்ற ஏழைகளுக்கு உரிமையாக்க அதை இலவசமாக நில ஒப்படை செய்ய வேண்டுமென இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரின் மூலமாக முறையீடுகள் வரப்பெற்றுள்ளனவா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : (அ) இல்லை.

(இ) வினவிற்கு இடமில்லை.

திரு. டி. சந்தோஷம் : கான்சாபுரம் பஞ்சாயத்தில் இதுபற்றித் தீர்மானம் போட்டது எனக்கு நேரில் தெரியும். டிஸ்ட்ரிக்ட் டெவ லப்மெண்ட் கவுன்சிலில் கூட இதைப்பற்றிக் கலெக்டரிடம் கேட்டு விவாதிக்கப்பட்டது. இதுவரை அமைச்சர் அவர்களுக்கு இந்தக்

(†) Postponed from the List of Questions for 27-8-70.

கோரிக்கை வராமலிருந்தால், அமைச்சர் அவர்கள் அதைப்பற்றிக் கேட்டுப் பெற்று ஆவன செய்ய முயற்சி செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ.பி. ராமன் : கலெக்டரிடம் வந்திருக்கிறதா என்றுதான் இங்கே கேள்வியிருக்கிறது. அப்படி ஒன்றும் வரவில்லை. காட்டிலாகாவுக்குச் சொந்தமான நிலத்தை இம்மாதிரிக் கொடுப்பதில் அரசாங்கத்திற்குக் கொள்கை அளவில் ஒரு சில கருத்துக்கள் இருக்கின்றன. மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ''இனிமேல் குறிப்பிட்ட இடங்களில் சொன்னால், அதை மட்டும் தனியாக ஆராய்ந்து பார்த்து கொடுக்கலாமா வேண்டாமா என்று பரிசீலனை செய்யலாம்'' என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே இதைக்கூடத் தனியாகப் பரிசீலனை செய்யலாம்.

திரு. டி. சந்தோஷம் : குறிப்பிட்ட இந்த இடத்தைப் பொறுத்த வரையில், முன்பு இந்த நிலம் பட்டா நிலமாக இருந்தது. பிற்காலத்தில் இது ரிசர்வு பாரஸ்ட் என்று பிரித்துச் சேர்க்கப்பட்டாலும்கூட, இந்த நிலம் மலைச் சரிவில் இல்லை. சமதளத்தில்தான் இருக்கிறது. எனவே பல பேருக்கும் பட்டா வழங்கக்கூடிய கொள்கையைக் கொண்டிருக்கிற இந்த அரசு இந்த இடத்தையும்—அதுவும் ஏற்கெனவே பட்டா நிலமாக இருந்த இந்த இடத்தை—மற்றவர்களுக்கு வழங்க முன் வர வேண்டும். அதற்கான முயற்சியை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ.பி. ராமன் : இதற்கான மனு வந்தால், தனியாக அதைப் பற்றிப் பரிசீலிக்கலாம்.

UNSTARRED QUESTIONS

காந்தி நூற்றாண்டு விழா

1. வினா :—திரு. வி. தங்கபாண்டியன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

காந்தி நூற்றாண்டு விழாவையொட்டி தமிழ்நாடு அரசாங்கம் எவ்வளவு தொகை இதுவரை மாவட்ட வாரியாகச் செலவிட்டுள்ளது ?

காந்தி நூற்றாண்டு விழாவையொட்டி தமிழ் நாடு அரசாங்கம் மாவட்ட வாரியாகவும், காந்தி நூற்றாண்டு விழா மாநிலக் குழு மூலமாகவும் செலவிட்ட தொகை விவரம் :

மாவட்டம்	தொகை ரூ. காசு	மாவட்டம்	தொகை ரூ. காசு
தஞ்சாவூர்	24,801—07	தென் ஆற்காடு	12,059—49
திருநெல்வேலி	32,576—57	செங்கற்பட்டு	4,621—88
கோயமுத்தூர்	27,478—65	வட ஆற்காடு	11,793—96
தர்மபுரி	38,358—72	கன்னியாகுமரி	4,400—28
நீலகிரி	2,751—93	திருச்சிராப்பள்ளி	19,500—00

(குறிப்பு : மதுரை, சேலம், இராமநாதபுரம், சென்னை ஆகிய மாவட்டங்கள் பற்றிய விவரம் கிடைத்தவுடன் தெரிவிக்கப்படும்.)